செய்தி வெளியீடு எண் : 41 நாள் : 06.09.2024

# ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு - பத்திரிக்கை செய்தி

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் ஆற்றிய உரை

அனைவருக்கும் வணக்கம்!

நான் ஒவ்வொரு முறையும் சென்னையிலிருந்து ஜவ்வாது மலைக்கு வரும்போது என் நினைவில் வருவது SFRD நிறுவனப் பள்ளி மட்டுமே இப்பகுதி மக்கள் என்னிடம் காட்டும் அன்பு விலை மதிப்பற்றது நான் பார்த்த இந்த SFRD ன் 45 ஆண்டுகால சேவைக்கான காணொளியில் உள்ள அனைத்து நற்செயல்களுக்கும் காரணம் SFRD நிறுவன செயலாளர் முனைவர் கே அர்ஜுனன் அவர்கள் தான். கல்வியில் 0.2% முதல் 39% சதவீதமாக ஜவ்வாது மலை பழங்குடியின மக்களின் கல்வித் தரம் உயர்த்திய முனைவர் கே அர்ஜுனன் செயலாளர் அவர்கள் கண்ட கனவு இன்று வெளிப்பட்டுள்ளது செயலாளர் அர்ச்சுனன் அவர்கள் மத்திய அரசு பணியையும் துறந்து இப்பகுதிக்கு வந்து இப்பகுதி ஜவ்வாது பழங்குடியின மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து இப்பகுதியை இந்த அளவு வளர்ச்சிக்கு கொண்டு வந்து பார்த்ததும் நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். 40 வருடங்களுக்கு முன்பு இப்பகுதி எப்படி இருந்திருக்கும் தற்போது எவ்வாறு வளர்ச்சி அடைந்து உள்ளது என்பதை பார்க்கும்போது என்னால் புரிந்து கொள்ள முடிகிறது

“கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக”

என்ற திருக்குறளுக்கு ஏற்ப அனைவரும் உயர வேண்டும் முன்னாள் மாணவர்கள் இங்கு வந்து இப்பள்ளியில் படித்துவரும் தற்போது உயர்ந்த நிலையில் இருக்கும் முன்னாள் மாணவர்கள் அனைவரும் இப்பள்ளிக்கு வந்து இங்கு கல்வி பயிலும் தற்போதைய மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களைப் போல் நீங்களும் உயர வேண்டும் என்று முன்னாள் மாணவர்கள் இம்மானவர்களை ஊக்கப்படுத்தி முன்னாள் மாணவர்கள் சங்கம் அமைக்க வேண்டும். உங்கள் கல்வி ஆர்வம் அப்போதுதான் அதிகரிக்கும். மாணவர்களாகிய நீங்கள் நன்கு கல்வி பயின்று விஞ்ஞானிகளாக அதாவது சயின்டிஸ்ட்களாக மாறி விண்ணிற்கு செல்லும் அளவிற்கு உயர வேண்டும். செல்ல வேண்டும். SFRD பள்ளி மாணவர்கள் உயர வேண்டும் இங்கிருந்து ஏராளமான ஆராய்ச்சியாளர்களை நான் மிகவும் எதிர்பார்க்கிறேன் இப்பள்ளியில் இருந்து மாணவர்கள் ஆராய்ச்சியாளர்களாகவும் விஞ்ஞானிகளாகவும் மாறி விண்ணிற்கு செல்லும் அளவிற்கு உயர வேண்டும் இப்பள்ளி மாணவர்கள் கல்வியில் உயர்ந்து ஐபிஎஸ் மற்றும் ஐஏஎஸ் அதிகாரிகளாக உருவாகவும் சயின்டிஸ்ட் ஆக உயர விரும்பும் இப்பள்ளி மாணவர்களை தேர்ந்தெடுத்து SFRD நிறுவன செயலாளர் அர்ச்சுனன் மூலமாக சென்னையில் இருக்கும் ராஜ்பவனுக்கு உங்களை நான் வரவழைத்து அவர்களுக்கு நான் விருந்தளித்து கல்வி மில் உயர உங்களை நான் ஊக்கப்படுத்துவேன் உங்கள் வளர்ச்சிக்கு பாரத பிரதமர் மாண்புமிகு நரேந்திர மோடி அவர்களின் வழிகாட்டுதலின்படி நான் என்றென்றும் இப்பள்ளி மாணவர்களுக்கும் ஜவ்வாது மலை பழங்குடியின மக்களுக்கும் உறுதுணையாக இருப்பேன் இன்று நான் இப்பள்ளி செயலாளர் மற்றும் ஜவ்வாது மலை

**பழங்குடியின மக்களின் அன்பில் நான் இன்னும் புத்துணர்ச்சி பெற்று சுறுசுறுப்பாகி நேர்மையான ஆற்றல் பெற்றுள்ளேன். இவை அத்துணைக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**நன்றி வணக்கம் ஜெய் ஹிந்த்.**

---

**ஆளுநர் மாளிகை,** **வெளியீடு:-**

**சென்னை-22** **மக்கள் தொடர்பு அலுவலகம்**